திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகையாக, ஊனம் உற்றோர் உதவித் தொகையாக அரசு வழங்கும் உதவித் தொகையினை ஒவ்வோர் வட்டார அலுவலகத்திலும் கொடுக்கப்படுகிற மனுக்களின் சீனியாரிட்டி அடிப்படையிலே கொடுக்கிறார்கள். 100 பேர்கள் மனு கொடுக்கிறார்கள் என்றால், அதில் அந்த வருடம் 75 பேர்கள் அல்லது 90 பேர்கள் என்று குறியீடு வைத்துக் கொடுக்கும்போது, உண்மையாகவே ஊனம் உற்றவர்கள் அல்லது டோட்டலாக, முழுவதுமாக ஊனம் உற்றவர்கள் அந்த சீனியாரிட்டியில் 76-வது நபராகவோ, 90-வது நபராகவோ இருக்க நேரிட்டால் அவர்களுக்கு அந்த உதவித் தொகை, அடுத்த ஆண்டுதான் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பம் நேரிட்டுவிடும். ஆகவே, இப்படி டோட்டலாக ஊனம் உற்றவர்களுக்கு, அவர்களுடைய ஊனத்தின் அடிப்படையிலே, முன்னுரிமை கொடுத்து உடனடியாக அந்த உதவியை வழங்க பரிந்துரை செய்ய அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர்களோ ஊனம் உற்றவர்களோ அல்லது விதவைகளோதான் வட்டார அலுவலகங்களில் விண்ணப்பதைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் அரசு முடிவு எடுத்துக்கொண்டு வருகிறது. சீனியாரிட்டி என்பது எல்லா முறைகளிலும் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் கொடுக்காமல், பின்னால் வருபவர்களுக்கு கொடுத்தால், முதலில் மனு கொடுத்த எங்களுக்கு கொடுக்கவில்லையே என்று அவர்கள் நம்மிடம் முறையிடுவதற்கு நாம் ஆளாக நேரிடும். ஆகவே அதனையொட்டித்தான் சீனியாரிட்டி முறையில் முதலில் வந்தவர்களுக்கு முதலில் கொடுத்துவிட்டு பிறகு வருபவர்களுக்கு அடுத்த ஆண்டு என்று நிர்ணயித்துக் கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

தமிழ்நாட்டிலுள்ள உடல் ஊனமுற்றோர்.

*வினா எண். 261—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உடல் ஊனமுற்றோர் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் அலுவலகங்களில் பணியாற்றுகின்றனர்?

(இ) எத்தனை பேர் வேலைவாய்ப்பு பயிற்சி பெற்றுள்ளனர்?

1983 பிப்ரவரி 12]

(ஈ) தனியார் துறையினரும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் உடல் ஊனமுற்றோருக்கு ஒதுக்கீடு செய்தல் வேண்டுமென அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) 1976ஆம் ஆண்டு தமிழக நிதித்துறையின் பொருளாதார ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு நடத்திய உடல் ஊனமுற்றோர் பற்றிய கணக்கெடுப்பு அறிக்கையின்படி தமிழ்நாட்டிலுள்ள ஊனமுற்றோர் எண்ணிக்கை மொத்தம் 2,35,181 ஆகும்.

(ஆ) இவர்களில் 1976 ஆம் வருடத்திய ஆய்வு அறிக்கையின்படி 36,700 நபர்கள் அலுவலகங்களில் பணியாற்றுகின்றனர்.

(இ) ஊனமுற்றோரில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் தற்சமயம் இல்லை. எனினும் மொத்தம் உள்ள ஊனமுற்றோரில் பயிற்சி பெற்ற பின் வேலை வேண்டி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலைக்காகக் காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 16,191 ஆகும்.

(ஈ) அரசுத்துறை, அரசுத்துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சித் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் ஊனமுற்றோருக்கு 3 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனியார் துறையில் ஒதுக்கீடு செய்ய இதுவரை ஏதும் அரசு ஆணை கிடையாது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களின் வாழ்க்கை வளம் பெற ஏதேனும் அரசு சிறப்புத் திட்டங்கள் தயாரித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக உடல் ஊனமுற்றோர் ஆண்டாக 1981 ஆம் ஆண்டை நாம் கொண்டாடுகிற சமயத்தில், அவர்களுக்காக 20 சிறப்பு திட்டங்களைத் தீட்டி, அவைகள் மூலமாக பல சிறப்புப் பணிகளை இந்த அரசு செயலாற்றி வந்தது. கல்வியிலும் அவர்களுக்கு முதன்மையிடம் கொடுக்கப்பட்டது. தொழில்களிலும் அவர்களுக்கு முதன்மையிடம் கொடுக்கப்பட்டது. தொழிற் பயிற்சியிலும் அவர்களுக்கு முதன்மையிடம் கொடுக்கப்பட்டது. இப்படி பலவாறாக நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு, சிறப்புத் திட்டங்களின் வாயிலாக அவர்களுக்கு அதன் பயனை அரசு கொடுத்தது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட, அவர்களின் வாழ்க்கையில் உடனடியாக பரிகாரம் காண, ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள், அவர்களுக்கு வழங்கப்பட

வேண்டிய உதவித் தொகையை வழங்கிட வேண்டும் என்கிற வகையில் அதிகாரிகளுக்கு அரசு ஆணை பிறப்பித்து ஆவன செய்யுமா? அவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகிற உதவித்தொகையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன உதவித் தொகையினைப் பற்றிக் கேட்கிறார்கள் என்பது தெரியவில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, நான் இரண்டு கேள்விகளை மாண்புமிகு அமைச்சர்முன் வைத்தேன். உடல் ஊனமுற்றோர் வாழ்க்கைத் தரம் உயர குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் அது குறித்து நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்பது ஒரு கேள்வி. அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற உதவித் தொகை அரசின் சார்பில் வழங்கப்படுகின்றது. அது போதுமானதாக இல்லை, அதை உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்பது மற்றொரு கேள்வி.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 45 வயது முடிந்த ஊனமுற்றோருக்கு அரசாங்கத்தால் உதவித் தொகை கொடுக்கப்படுகின்றது. தொழில் பயிற்சி பெறுகின்ற ஊனமுற்றவர்களாக இருந்தால் 150 ரூபாய் உதவித் தொகை கொடுக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த உதவித் தொகையைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்பது தெரியவில்லை.

மாமுண்டி ஆற்றின் மீது விடத்தினாம்பட்டியில் மேம்பாலம் கட்டும் திட்டம்.

*குறுகிய கால வினா எண். 5—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை நகராட்சி எல்லைக்குள் மணப்பாறை நகரை இரண்டாக்கிச் செல்லும் மாமுண்டி ஆற்றின் மீது விடத்தினாம்பட்டியில் மேம்பாலம் (Over Bridge) கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : மணப்பாறை நகராட்சி இத்திட்டத்தினை மேற்கொள்வதற்காக 1983—84 வரவு-செலவு மதிப்பீட்டில் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் அந்நகராட்சிக்கு கடன் உதவிக்கான வகை செய்ய அரசு உத்தேசித்துள்ளது.

TRUTH ALONE TRIUMPHS